# 7 வெற்றி வேற்கை

## உதவியால் பெறும் நன்மை

தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒரு விதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி, ஆள்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழலாகும்மே

– அதிவீரராமபாண்டியர்



## பொருள் அறிவோம்

பழைமையான ஆலமரத்திலுள்ள சிறு பழத்தின் ஒரு விதையானது, தெளிந்த நீருள்ள குளத்தின் சிறிய மீனின் முட்டையைவிடச் சிறியதாகும். அந்தச் சிறிய விதை, பெரிய ஆலமரமாக வளர்ந்து நிற்கும்பொழுது, அம்மரத்தின் நிழலில் யானைப்படை, தேர்ப்படை, குதிரைப் படை, காலாட்படை ஆகியவற்றோடு மன்னனும் மற்றவர்களும் தங்க முடியும். அதுபோல, நீங்கள் செய்யும் உதவி சிறியதாக இருப்பினும், அது மற்றவர்களுக்கு மிகப்பெரிய பயனைத் தரும் .



## வாங்க பேசலாம்



- பாடலின் பொருளை உமது சொந்த நடையில் கூறுக
- உனக்கு உனது நண்பன் செய்த சிறிய உதவி, அந்த நேரத்தில் பெரியதாக இருந்த அனுபவத்தைப் பற்றிப் பேசு.




சிறு சிறு உதவிகளைப் பிறருக்குச் செய்வது பற்றி உனது கருத்து என்ன? வகுப்பில் கலந்துரையாடுக.

# படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 தெள்ளிய இச்சொல்லின் பொருள் ..................................

அ) மெல்லிய  ஆ) இளகிய

இ) முதிர்ந்த  ஈ) அழகிய

02 ஆல் இச்சொல்லின் பொருள் ..................................

அ) வேலமரம்  ஆ) ஆலமரம்

இ) அரசமரம்  ஈ) வேப்பமரம்

03 கயம் இச்சொல்லின் பொருள் ..................................

அ) நீர்நிலை  ஆ) பயம்

இ) வானிலை  ஈ) பருவநிலை

04 புரவி இச்சொல்லின் பொருள் ..........................................

அ) யானை ஆ) பூனை

இ) ஆள் ஈ) குதிரை

05 பெரும்படை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................................

அ) பெருமை + படை ஆ) பெரும் + படை

இ) பெரு + படை ஈ) பெரிய + படை

06 நிழல் + ஆகும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........................................

அ) நிழல்ஆகும் ஆ) நிழலாகும்

இ) நிழல்லாகும் ஈ) நிழலாஆகும்

## வினாக்களுக்கு விடையளி

01 ஆலமரத்தின் விதை எவ்வாறு இருக்கும் என்று அதிவீரராமபாண்டியர் குறிப்பிடுகிறார்?

02 ஆலமரத்தின் நிழலில் தங்கும் படைகள் யாவை?

03 இப்பாடலின் பொருள் எதனுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது?

## பொருத்தமான நிறுத்தக்குறி இடுக.

01 ஆகா என்ன சுகம் தெரியுமா

02 என்னைக் கட்டிப் போடுகிறார்கள்

03 ஆகா இது என்ன பிரமாதம்

04 நான் என்ன வேலை செய்ய வேண்டும்

05 காய்கறிக்கடையில் தேவையான தக்காளி கத்தரி புடலை ஆகியவற்றை வாங்கி வந்தேன்

# மொழியோடு விளையாடு

**சொல் ஒன்று, பொருள் இரண்டு – கண்டுபிடி**

| | | |
|---|---|---|
| | எ.கா வயலில் மேய்வது | ஆடு |
| | அழகாய் நடனம் | ஆடு |
| 01 | மாதத்தின் மறுபெயர் | ________ |
| | நிலவைக் குறிப்பது | ________ |
| 02 | வகுப்பில் பாடம் | ________ |
| | மாடி செல்ல உதவும் | ________ |
| 03 | வளைந்து ஓடுவது | ________ |
| | 6 – இந்த எண்ணின் பெயர் | ________ |
| 04 | பூக்களைத் தொடுத்தால் | ________ |
| | அந்தி சாயும் பொழுது | ________ |
| 05 | சோற்றின் மறுபெயர் | ________ |
| | அழகிய பறவை | ________ |







## கலையும், கைவண்ணமும்

கரிக்கோல் சீவிய துகள்களைக் கொண்டு படங்களை உருவாக்குவோம்.

எ.கா:




## இணைந்து செய்வோமா


கூடையில் இருக்கும் சொற்களுள் முதல் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எடுத்து முதல் பழத்தில் எழுதுக. இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எடுத்து இரண்டாம் பழத்தில் எழுதுக.
பூனை
தம்பி
சிறு பழம்
தண்ணீர்
தட்டு
யானை
சிறுமீன்
சிலை
கிண்ணம்
வண்ணம்
பானை
சிலந்தி
சிந்தனை
தவளை
நுண்ணியதே
அண்ணம்
தலை


சிறுபழம்
சிறுமீன்



கிண்ணம்
வண்ணம்


## அறிந்து கொள்வோம்



மீன்களில் 22, 000 வகையான மீன்கள் உள்ளன. இவற்றுள் மிகச் சிறியது கோபி வகையைச் சார்ந்தது. இதன் நீளம் 13 மில்லி மீட்டர், மிகப் பெரிய மீன் திமிங்கலச் சுறா. இதன் நீளம் 18 மீட்டர்.









## செயல் திட்டம்

செய்தித்தாளில் பிறருக்கு உதவியதாக வரும் செய்திகளைச் சேகரித்துக் கீழே உள்ள செய்தித் துணுக்கு கட்டத்தில் ஒட்டுக.

| செய்தித் துணுக்கு |
| --- |
| |

## இணைப்புச் சொற்களை அறிவோமா?

இரண்டு தொடர்களை இணைக்கப் பயன்படும் சொற்கள் இணைப்புச் சொற்கள் ஆகும்.

சில இணைப்புச் சொற்களையும், அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் அறிவோம்.

அதனால், ஆகவே, ஆனால், எனினும், ஆகையால், எனவே போன்றவை.

01 பருவ மழை பெய்தது அதனால் ஏரி, குளங்கள் நிரம்பின.

02 காற்று பலமாக வீசியது ஆகவே மரங்கள் வேரோடு சாய்ந்தன.

03 அப்பா விரைவாக வந்துவிடுகிறேன் என்றார் ஆனால் வரவில்லை.

04 பூக்கள் அழகாகப் பூத்திருந்தன எனினும் பறிக்க மனமில்லை.

05 நான் தாய்நாட்டிலேயே பணிபுரிய விரும்புகிறேன் ஆகையால் வெளிநாடு செல்லமாட்டேன்.

06 தினமும் காலையில் எழுந்து நன்றாகப் படித்தேன் எனவே நான் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றேன்.

## பயிற்சி

ஆகவே, எனவே, ஆகையால், ஆனால் ஆகிய இணைப்புச் சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குக.

__________ __________ __________ __________

__________ __________ __________ __________

__________ __________ __________ __________

__________ __________ __________ __________